கட்டுப்பாட்டில் இருக்கின்ற பள்ளிகள் அனைத்திலும், அவர்களே பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஆண்டுக்கொரு முறை விடுமுறையின்போது, இதுபோன்ற சிறிய சிறிய பழுதுகள் எங்கு இருக்கின்றனவோ, அங்கெல்லாம் அந்தப் பழுதுகளைச் சீர்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சிறப்பான முறையில் பள்ளிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

102—

துணை மின் நிலையம்

***4527—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பெரியகள்ளிப்பட்டி ஊராட்சி, மஜரா முருகன் நகர் அருகில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான சத்தியமங்கலம் தொகுதியில், பெரியகள்ளிப்பட்டி ஊராட்சி, மஜரா முருகன் நகரில் எதிர்கால மின் தேவையைக் கருத்தில்கொண்டு, 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

2017 ஜூன் 29]

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமிழ் மக்களின் வளர்ச்சிக்காகவும், அல்லும் பகலும் அயராது உழைத்து, மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதை விட்டு மறையாது வாழ்ந்துகொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்; தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியகள்ளிப்பட்டி ஊராட்சி, மஜரா முருகன் நகரில் துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வினா எழுப்பும் முன்னே எங்கள் கோரிக்கையினைப் பரிசீலனை செய்து, எங்கள் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்ற மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வட்டம், திருவாய்பாடி, சோழபுரம் பகுதிகளில் மின் தாழ்வினைப் போக்கும்வகையில், கல்லூர் ஓராயக்கோட்டம், மத்தியூர் கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான மந்தைவெளிப் புறம்போக்கில் சுமார் 1½ ஏக்கர் பரப்பளவில் ஆர்.எஸ்.எண் 308/1–ல், 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைத்திட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அத்தியூர், கல்லூர், கோவிலாச்சேரி, கள்ளப்புலியூர், விளந்தகண்டம், குமரன்குடி, சோழபுரம், அணக்குடி போன்ற கிராமங்களில் விவசாயிகளும், பொது மக்களும் பயன்பெறும் வகையில், கல்லூர் கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் தொடங்கப்பட்டிருக்கும் துணை மின் நிலையப் பணியை விரைவுபடுத்தி, அப்பணியை முடித்து, அந்தப் பகுதியில் நிலவும் மின்னழுத்தப் பிரச்சினையைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதி மந்தைவெளிப் புறம்போக்கு என்று சொல்கிறார்கள். வகை மாற்றம் செய்வதற்காக அரசுக்கு அந்தக் கோப்பு வந்திருக்கும் என்று நினைக்கின்றேன். அதனை ஆய்வு செய்து, உடனடியாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். நான் கடந்த முறையே சொன்னேன்; எந்தெந்தப் பகுதிகளில் துணை மின் நிலையங்களின் தேவை இருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளில் இடம் கிடைக்கின்றபோது உடனடியாக முன்னுரிமை அடிப்படையில் அமைக்கப்படும் என்று சொன்னேன். பொதுவாகவே, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால்தான், அந்த நான்கு மாவட்டங்களில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

திரு. எம். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருண்ட தமிழகத்தை ஒளி மிகுந்த தமிழகமாக மாற்றிக்காட்டிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தஞ்சை மாவட்டம் முழுக்க முழுக்க விவசாயத்தைச் சார்ந்திருக்கின்ற மாவட்டம். இவ்வாண்டு கடுமையான வறட்சியினால் அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள், தங்களுடைய சாகுபடிப் பரப்பைக் குறைத்துக்கொண்டார்கள். இருந்தபோதிலும் குறைந்த பரப்பில் சாகுபடி செய்துகொண்டிருக்கின்ற நிலையில், நெல் விவசாயத்தைக் காப்பாற்றுகின்ற வகையில், அந்தப் பகுதிகளில் எல்லாம்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல வலங்கைமான், நீடாமங்கலம், அம்மாபேட்டை, கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் போன்ற பகுதிகளில் எல்லாம்—மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அங்குள்ள விவசாயிகள் மோட்டார்களை இயக்குவதற்கு பாதிப்புற்ற நிலையில் உள்ளார்கள். எனவே, குறைந்த மின் அழுத்தத்தைப் போக்குவதற்கு 400 கே.வி. கொண்ட துணை மின் நிலையம் ஒன்றை அந்தப் பகுதியில் அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

2017 ஜூன் 29]

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தஞ்சாவூர் பகுதியில் குறைந்த மின்னழுத்தம் இருப்பதாகச் சொன்னார். நான் ஏற்கெனவே சொன்னதைபோல, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய நான்கு மாவட்டங்களில் மின் அழுத்தம் குறைவாகத்தான் இருக்கிறது. அதைக் கண்டறிந்துதான், நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருக்கின்ற மணல்மேடு பகுதியில் 400 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தஞ்சாவூர் பகுதியில் அதுபோன்று தேவை இருக்கின்றது என்று சொல்கிறார். தேவைப்படின், 230 கே.வி. துணை நிலையம் அமைக்கத் தயாராக இருக்கிறோம். அதுபோன்று, 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைப்பதற்கும் தயாராக இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குப் பின்னரும் மின் பளு குறைவாக இருக்கின்றது என்று கருதினால், எதிர்காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இது எடுத்துச் செல்லப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளச்சல் தொகுதிக்குட்பட்ட, முட்டம் ஊராட்சியில் நீண்ட காலமாக மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது. அந்தப் பகுதிக்கு மணவாளக்குறிச்சி பகுதியில் உள்ள மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்படுகிறது. அந்தப் பகுதியிலே சீரான மின்சாரம் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், நிச்சயமாக ஒரு துணை மின் நிலையம் அவசியமாகிறது. எனவே, அந்தப் பகுதியில் துணை மின் நிலையத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மணவாளக்குறிச்சியில் ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வந்தாலும், மின் அழுத்தம் குறைவாக இருக்கின்றது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது என்றால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

பொறியியல் கல்லூரி

***7088—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை தெற்குத் தொகுதியில் புதிய பொறியியல் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், மதுரை தெற்குத் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*